1979 ஏப்ரல் 26]

(முற்பகல் 11-10)

(ஆ) வரலாற்று பாட நூலில் இஸ்லாமிய நெறிமுறைக்கு மாறான கருத்துக்கள் வெளியிடப் பெற்றிருப்பது குறித்து.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டுப் பாட நூல் நிறுவனத்தால் வெளியிடப்பட்டுள்ள மேல்நிலை முதலாம் ஆண்டுக்கான வரலாற்று நூலில் இஸ்லாமிய நெறி முறைகளுக்கு மாறாக சில கருத்துக்கள் வெளியிடப் பட்டுள்ளதால், அச்சமூகத்தினரிடையே நிலவும் பதட்ட நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வித்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: தலைவர் அவர்களே, தற்போது மேல்நிலைக் கல்வி முதலாவது ஆண்டுக்குரிய வரலாற்றுப் பாட நூலில் இருக்கும் இஸ்லாமிய சமயத்தைப் பற்றியும் நபிகள் நாயகம் அவர்களைப் பற்றியும் உள்ள பகுதி சில தவறான கருத்துக்களை கொண்டுள்ளதாக அரசின் கவனத் திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது.

இதனை அரசு பரிசீலித்து, இந்த வரலாற்றுப் பாட நூலில் இஸ்லாமிய சமயம், நபிகள் நாயகம் அவர்களைப் பற்றிய பகுதியை உடனடியாக நீக்கிவிட தமிழக பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநருக்கு ஆணையிட்டுள்ளது. தவிர, அந்தப் பகுதிக்குப் பதில் இஸ்லாமிய சமயம் கலாசாரம் பற்றி நன்கு அறிந்தவர்களைக் கொண்டு, ஒரு புதிய பகுதி எழுதப்பட்டு அதை வரலாற்றுப் பாடநூலுக்குப் பிற்சேர்க்கையாக (இணைப் பாக) வருகிற ஆண்டிலிருந்து வெளியிடலாம் என்றும் முடிவு செய்துள்ளது. இது பற்றியும் பாடநூல் நிறுவன மேலாண்மை இயக்குநருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

திரு. எம். ஏ. லத்தீப்: தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட பாடநூல்களை தயாரிக்கும்போது, நபிகள் நாயகத்தைப் பற்றியும், இஸ்லாமிய சமூகத்தைப்பற்றியும் தவறான கருத்துக் களைப் போட்டு எழுதி வருகிறார்கள். இதைத் தவிர்ப்பதற்கு இந்த பாடநூல் நிறுவனத்தில் இஸ்லாமிய மார்க்கத்தைப்பற்றி நன்றாகத் தெரிந்த இஸ்லாமிய மார்க்க அறிஞர்களை நியமிக்க வேண்டும் என்று பல்வேறு நேரங்களில் எடுத்துச்சொல்லப் பட்டிருக்கிறது. அது இதுவரையிலும் நிறைவேற்றப்படவில்லை. இப்போதாவது பரிவோடு இதை பரிசீலித்து அதற்கு ஆவன செய்ய அரசு முன்வருமா?

[திரு. எம். ஏ. லத்தீப்] [1979 ஏப்ரல் 26

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையை அரசு பரிசீலிக்கும் என்பதை தெரிவித்துக்கொள்கிறேன்.

இ. பல்லாவரம் கல் உடைக்கும் தொழிலாளர்களது கோரிக்கைகள் குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் கே. வடிவேலு, மு. அம்பிகாபதி, செ. சதாசிவம், சின்ன சேலம் மா. சுப்பிரமணியம், இரா. தாமரைக்கனி ஆகியோர், பல்லாவரம் கல் உடைக்கும் தொழிலாளர்களது கோரிக்கைகள் குறித்து அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருவார்கள்.

திரு. மு. அம்பிகாபதி : தலைவர் அவர்களே, ''சென்னை பல்லாவரம் கல் உடைக்கும் தொழிலாளர்களது கோரிக்கைகள் நிறைவேற்றப்படாததால் அவர்களிடையே நிலவும் பதட்ட நிலை'' குறித்து அவசர பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புகு தொழிலாளர் நல அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம் : தலைவர் அவர்களே, செங்கற்பட்டு மாவட்ட குவாரி மற்றும் கல் உடைக்கும் தொழிலாளர் சங்கம் 21.12.78 அன்று தொழிலாளர் துறை ஆணையரிடம் மேற்படி தொழிலாளர்களுக்கு தொழிலாளர் சட்டங்களின் பல்வேறு பிரிவுகளை அமுல் செய்ய கோரிக்கை விடுத்தது. அச்சங்கத்தின் கோரிக்கைகள் ஆவன. (குறுக்கீடு(தலைவர் அவர்களே, அவர்கள் கொடுத்திருக்கின்ற 9 கோரிக்கைகள் இருக்கின்றன. இந்த விவரங்கள் எல்லாம் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கும் தெரியும். இவை அத்தனையும் படிக்கவேண்டுமா, நேரம் ஆகும். மாண்புமிகு உறுப்பினர் படிக்கவேண்டும் என்கிறார்..

மாண்புமிகு பேரவைத் தலைவர் : உறுப்பினரிடம் கேட்டால் படியுங்கள் என்றுதான் சொல்லுவார்கள். நீங்களாக பார்த்து முடிவு செய்து பதிலைச் சொல்லவேண்டும்.

*மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : இவர்கள் ஒன்பது கோரிக்கைகள் கொடுத்திருக்கிறார்கள். இந்தக் கோரிக்கைகளை தொழிலாளர் துறை ஆணையர் பரிசீலித்துக் கொண்டிருக்கும் போதே இச்சங்கத்தினர் 28.3.1979 அன்று போராட்டம் நடத்தப் போவதாக அறிவித்தது.